# பேஸ்மென்ட் வெள்ளப்பெருக்கு

## உங்கள் வீட்டைத் தாக்குவதற்கு முன் தயாராக இருக்கவும்

கனமழையின் போது, கழிவுநீர் கால்வாய்கள் நிரம்பி வழியக்கூடும். பேஸ்மென்ட்டில் வெள்ளம் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க வீட்டின் உரிமையாளர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

**உங்களுக்கு உதவ நாங்கள் இங்குள்ளோம்.**


## மாநகராட்சியின் ஆதரவு

ரொறன்ரோ மாநகராட்சி பேஸ்மென்ட் வெள்ளத்தடுப்பு மானியத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கவும். உங்கள் வீட்டை பேஸ்மென்ட் வெள்ளத்திலிருந்து பாதுகாக்க ரொறன்ரோ மாநகராட்சி வழங்கும் மானியமாக **$6,650*** வரை நீங்கள் பெறலாம்.


* நீங்கள் தகுதி அளவுகோல்கள் அனைத்தையும் பூர்த்தி செய்தால்

| **தகுதியான பணிகள்** | **கிடைக்கக்கூடிய அதிகபட்ச மாநகராட்சி மானியம்** (செலவில் 80% வரை) |
|---|---|
| புதியது: வீட்டின் பிளம்பிங் (Plumbing) மதிப்பீடு | $500 வரை |
| பேக் வாட்டர் வால்வுகள் (அதிகபட்சம் இரண்டு சாதனங்கள்) | ஒரு சாதனத்திற்கு $1,600 வரை |
| சம்ப் பம்ப் | $2,250 வரை |
| புதியது: சம்ப் பம்ப் பேட்டரி பேக்கப் மின்சாரம் | $300 வரை |
| அடித்தள வடிகால் (நுண்துளை வடிகால்) | $400 வரை |
| **அதிகபட்ச மொத்த மானியத் தொகை** | **$6,650 வரை** |


## $0 முதல் $250 செலவில் நீங்கள் செய்யக்கூடியவை




தரை வடிகாலில் உள்ள தடைகளை அகற்றவும்.




கூரையின் விளிம்பில் உள்ள நீர்வடிகால்கள் மற்றும் மழைநீர்க் குழாய்களில் உள்ள இலைகள், பனிக்கட்டி, பனி மற்றும் பிற குப்பைகளை அகற்றவும்.



உங்கள் சம்ப் பம்ப் சரியாகச் செயல்படுகிறதா என்பதையும், கனமழை பெய்வதற்கு முன் அது தயாராக உள்ளதா என்பதையும் உறுதிசெய்ய, அதைத் தவறாமல் பரிசோதிக்கவும்.




இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அல்லது கனமழைக்கு முன், உங்கள் பேக் வாட்டர் வால்வைச் சுத்தம் செய்யவும்.




வெள்ள அபாய எச்சரிக்கைக் கருவியை நிறுவிப் பராமரியுங்கள்.



உங்கள் வீட்டின் அடித்தளத்திலிருந்து குறைந்தது 2 மீட்டர் தொலைவிற்கு தண்ணீரைத் திருப்பிவிட, நிலத்தின் சரிவை (grading) சரிசெய்யவும்.†




தரையிலிருந்து 10-15 cm உயரத்தில் அமையும்படி ஜன்னல் குழிகளையும், அதற்கான மூடிகளையும் பொருத்துங்கள் (தீ விபத்தின்போது தப்பிச் செல்வதற்கான விதிமுறைகள் அனுமதித்தால்). ஜன்னல்கள் மற்றும் அடித்தளங்களில் உள்ள கசிவுகளை அடையுங்கள், மேலும் அனைத்து ஜன்னல் குழிகளையும் கசிவின்றி முழுமையாக அடையுங்கள்.




மழைநீர்க் குழாய்களைத் துண்டிக்கவும், அடித்தள வடிகாலை மூடவும், மேலும் வீட்டின் அடித்தளத்திலிருந்து குறைந்தது 2 மீட்டர் தொலைவிற்கு தண்ணீரை வெளியேற்ற மழைநீர்க் குழாய்கள் மற்றும் சம்ப் நீர் வெளியேற்றும் குழாய்களை நீட்டிக்கவும்.†

† திசை திருப்பப்படும் தண்ணீர் அண்டை வீட்டாருக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்யவும்.

TORONTO 311

மாநகராட்சியின் பேஸ்மென்ட் வெள்ளத்தடுப்பு மானியத் திட்டம் பற்றிய தகவல்களை **toronto.ca/BFPsubsidy** என்ற இணையதளத்தில் பெறவும்.